# பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

O.S.No. 732/2023 Date : 12.01.2026

பெயர் : பாண்டியன் வா.சா. 1

சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார்.

எதற்காக இவ்வழக்கை தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் எனக்கு புறம்போக்கு இடத்தை விற்பனை செய்து விட்டதால் அளவு குறைவாக உள்ளதால் வழக்கை தாக்கல் செய்துள்ளேன். என்ன படித்துள்ளீர்கள் என்றால் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். என்ன தொழில் செய்து வருகின்றேன் என்றால் ஆட்டோ ஓட்டுநராக வேலை பார்த்து வருகிறேன். நான் தாக்கல் செய்த வழக்குரையில் எனது தகப்பனாருக்கு 3395 சதுர அடி மனை சொந்தமானது என குறிப்பிட்ட நிலையில் அந்த சொத்து அவருக்கு எவ்வாறு உரிமை ஏற்பட்டது என்றால் அச்சொத்தை அவர் கிரயம் வாங்கினார். எனது தகப்பனார் கிரயம் பெற்ற கிரைய ஆவணத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளார் என்றால் இல்லை.

எனது தகப்பனார் கிரயம் பெற்ற சொத்து எங்கு அமைந்துள்ளது என்றால் திருநீர்மலை லட்சுமிபுரத்தில் இரண்டாவது மேட்டு தெருவில் அமைந்துள்ளது. எனது தகப்பனார் கிரயம் பெற்ற சொத்தின் புல எண் தெரியுமா என்றால் புல எண். 386 ஆகும். கிரயம் பெற்ற மனையின் எண் தெரியுமா என்றால் மனை எண் 82 ஏ ஆகும். எனது தகப்பனார் கிரயம் பெற்ற மனையின் வகைப்பாடு என்ன என்றால் கிராம நத்த வகைப்பாடாகும். எனது தகப்பனார் கிரயம் பெற்ற 3395 சதுர அடி விஸ்தீரணத்திற்கு பட்டா வாங்கியுள்ளாரா என்றால் இரண்டு சென்ட்க்கு தான் பட்டா பெற்றுள்ளார்.

எனது தகப்பனார் பெயர் பி.ராமச்சந்திரன். எதற்காக இதர விஸ்தீரனத்திற்கு எனது தகப்பனார் பெயரில் பட்டா வாங்கவில்லை என்றால் போதிய வசதி வாய்ப்பு இல்லாததால் வாங்கவில்லை. எனது தகப்பனாருக்கு எத்தனை மகன்கள் என்றால் மூன்று மகன்கள். எனது தகப்பனாருக்கு சொந்தமான மேற்படி சொத்தில் பாதி சொத்தை எனக்கு கொடுத்து விட்டதாக உரிமைக்கு வருகிறேன் என்றால் சரிதான். எவ்வளவு விஸ்தீரணம் கொடுத்தார் என்றால் 1697.5 சதுர அடி மனையை எனக்கு கொடுத்துவிட்டார். எப்போது கொடுத்தார் என்றால் 2006 ஆம் ஆண்டு கொடுத்தார்.

வா.சா.ஆ.1 ஆவணத்தில் அசல் ஆவணத்தை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த ஆவணத்தை ஆலந்தூர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். எனது தகப்பனார் எனக்கு தானமாக கொடுத்த மனையில் வீடு கட்டினீர்களா என்றால் 2006 ஆம் ஆண்டு கட்டி விட்டேன். எனது தகப்பனார் எனது பெயருக்கு தானமாக கொடுத்த 1697 சதுர அடி மனைக்கு பட்டா வழங்கப்பட்டது என்றால் இல்லை அதற்கு குறைவாக நான் கட்டியுள்ள வீடு அமைந்துள்ள இடத்திற்கு மட்டும் பட்டா வழங்கப்பட்டது. மீத இடத்திற்கு பட்டா வழங்கவில்லை. எவ்வளவு விஸ்தீரனத்திற்கு எனது பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியவில்லை. எனது பெயரில் வருவாய் துறை ஆவணங்களில் பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான்.

மேற்படி அசல் பட்டாவை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளீரா என்றால் இல்லை. ஆலந்தூர் நீதிமன்றத்தில் உள்ள வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். எனது தகப்பனார் எனக்கு தானமாக கொடுத்த விஸ்தீரணத்தை தவிர இதர விஸ்தீரண சொத்தை என்ன செய்தார் என்றால் ஆறுமுகம் என்பவருக்கு கிரயம் செய்து கொடுத்தார். மேற்படி ஆறுமுகத்திற்கு கிரைய செய்து கொடுத்த கிரைய ஆவணத்தை தாக்கல் செய்துள்ளீரா என்றால் இல்லை. வில்லங்க சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேன். எனது தகப்பனார் நேரடியாக ஆறுமுகம் என்பவருக்கு கிரயம் செய்து கொடுக்கவில்லை என்றால் இரண்டு நில புரோக்கர் மூலமாக கிரையம் கொடுத்தார். அதில் நாங்கள் கையொப்பம் செய்துள்ளோம். நான் எவ்வளவு விஸ்தீரனத்தில் வீடு கட்டி உள்ளேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

எனது தகப்பனார் மூலமாக பிரதிவாதி கிரயம் பெற்ற சொத்தில் எப்போது வீடு கட்டினார் என்றால் 2007 ஆம் ஆண்டு கிரயம் பெற்று அப்போதே வீடு கட்டியுள்ளார். நானும் பிரதிவாதியும் பக்கத்து வீட்டுக்காரர்கள் என்றால் சரிதான். இருவரும் நண்பர்கள் என்றால் இதற்கு முன்பாக நண்பர்களாக இருந்தோம். தற்போது இல்லை. எனது தகப்பனார் எனக்கு தானமாக கொடுத்த 1697.5 சதுர அடி மனையில் இருந்து பிரதிவாதிக்கு 900 சதுர அடி மனையை கிராம நத்தம் என குறிப்பிட்டு விற்பனை செய்தேன் என்றால் சரிதான். 2012 ஆம் ஆண்டு கிரையம் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். 1697.5 சதுர அடி மனையில் நான் கிரையம் செய்து கொடுத்த 900 சதுர அடி விஸ்தீரணம் போக மீதம் 797

1/2 சதுர அடி விஸ்தீரணம் எனக்கு உரிமையானது என்றால் சரிதான். நான் மேட்டு தெருவை ஒட்டி வீடு கட்டி உள்ளேன் என்றால் சரிதான்.

எனது வீட்டிற்கு பின்னால் மூன்று அடி சந்து அமைந்துள்ளது என்றால் சரிதான். மேற்படி மூன்று அடி சந்து யாருடைய பொறுப்பில் உள்ளது என்றால் எனது பொறுப்பில் தான் உள்ளது. மூன்று அடி சந்திற்கு பின்னால் அமைந்துள்ள இடத்தை தான் பிரதிவாதிக்கு விற்பனை செய்தேன் என்றால் சரிதான். நான் பிரதிவாதிக்கு விற்பனை செய்த 900 சதுர அடி மனையில் 450 சதுர அடி மனை ஆனது புறம்போக்கு இடம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் பிரதிவாதிக்கு 494 சதுர அடி மனையை கிராமநத்த வகைப்பாட்டில் இருந்தும் 437 சதுர அடி மனையை புறம்போக்கு வகைப்பாடு நிலத்திலிருந்து விற்பனை செய்தேன் என்றால் சரியல்ல.

நான் மேட்டு தெருவை ஒட்டிய மனையில் வீடு கட்டியுள்ளேன் என்றால் சரிதான் எனது வீட்டிற்கு பின்னால் அமைந்துள்ள இடத்தை தான் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். எனது வீட்டை தாண்டி தான் பின்னால் இருக்கும் இடத்திற்கு செல்ல வேண்டும் என்றால் சரிதான். நான் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்த இடத்திற்கு வழி கொடுத்துள்ளீரா என்றால் இல்லை. எனது தகப்பனாரிடம் இருந்து கிரையம் பெற்ற சொத்தை ஒட்டி அச்சொத்து அமைந்துள்ளதால் பிரதிவாதி அந்த இடத்தின் வழியாக நான் கிரையம் கொடுத்த இடத்திற்கு செல்ல முடியும்.நான் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த சொத்து இருக்கு சொத்து இருக்கு வீடு கட்ட அனுமதி சான்று வழங்க கோரி பிரதிவாதி விண்ணப்பம் கொடுத்து இருந்தபோது நான் பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்த சொத்தில் 434 சதுர அடி மனையானது புறம்போக்கு மனை என்பதால் அவருக்கு கட்டடம் கட்ட அனுமதி வழங்கப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

பிரதிவாதி கட்டடம் கட்ட அனுமதி வழங்கப்படாதது குறித்து என்னிடம் முறையீடு செய்தார் என்றால் அவர் அவ்வாறு ஏதும் முறையீடு செய்யவில்லை அவர் முறையீடு செய்து இருந்தால் அச்சொத்தை நானே மீண்டும் கிரயம் பெற்றுக் கொண்டிருப்பேன். நான்

பிரதிவாதி என்னிடம் வந்து மேற்படி கட்டண அனுமதி வழங்கப்படாத குறித்து தெரிவித்தார் என்றாலும் அதனை நான் தற்போது மறைத்து பொய் சாட்சிய மளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் மேற்குறிப்பிட்டவாறு முறையிட்ட போது நான் அரசியல் பிரமுகரை வைத்து பிரதிவாதியை மிரட்டினேன் என்றால் நான் ஆட்டோ ஓட்டி வருகிறேன். அரசியல் சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது.

பிரதிவாதி எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினாரா என்றால் அனுப்பினார். பிரதிவாதி என்மீது ஆலந்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.202/2015 என வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். வழக்கில் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்த சொத்தை அளவீடு செய்து கொடுக்க வேண்டும் என தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த தீர்ப்பாணையை எதிர்த்து நான் தாக்கல் செய்த மேல்முறையீட்டு வழக்கு எனக்கு ஆதரவாக தீர்ப்பாகி உள்ளது என்றால் சரிதான். மேற்படி முதல் மேல்முறையீட்டு தீர்ப்பாணையை எதிர்த்து மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தில் இரண்டாம் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த வழக்குரையில் பிரதிவாதி போர்வெல் அமைப்பதற்காக என்னிடம் இடம் கேட்டு தொந்தரவு செய்வதாக குறிப்பிட்டுள்ளது தவறானது என்றால் சரியல்ல. நான் பிரதிவாதியை ஏமாற்றி புறம்போக்கு இடத்தை கிரயம் செய்து கொடுத்து விட்டேன் என்றால் சரியல்ல.நான் தாக்கல் செய்துள்ள வழக்கு செல்லத்தக்கதல்ல என்றாலும் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிவுற்றது**

**மறு விசாரணை இல்லை.**

S/d xxxx

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

**S/d C.P. Mullai Vanan**
District Munsif-cum
Judicial Magistrate
Pallavaram.